JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-11 Witness
for Prosecution

| CC.No. | 69/2021 | Crime No. | 310/2015 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-11-தேவேந்திரன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of February 2026 | | | |

**1 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை தலைமை சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 02.12.2020 ஆண்டு பவானி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது இந்த வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கோப்புகளை பெற்று சம்பவயிடம் சென்று பார்வையிட்டு ஏற்கனவே எனக்கு முன்பு புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ரமேஷ் என்பவர் விசாரித்த சாட்சிகளை மீண்டும் விசாரிக்க அவரிடம் கூறியதை என்னிடம் கூறியதால் அவர் விசாரித்த சாட்சிகளை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் எதுவும் நான் பதிவு செய்யவில்லை. அதன் பின்னர் City Bank Branch Operator Service Head பானு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வாதி ஜெயக்குமார் என்பவரின் வங்கி பரிவர்த்தனை கணக்கு விவரங்களை எனக்கு கொடுத்தார். அதனை பெற்றுக் தாக்கல் செய்தேன். ஜெயக்குமார் என்பவரின் வங்கி கணக்கு பரிவர்த்தன எண். 05014128427 கணக்கின் 2015 வருடம், செப்டம்பர் மாதத்தின் வரவு செலவு அறிக்கை பெற்று தாக்கல் செய்தேன். 02.12.2020 சென்னை கரூர் வைசியா வங்கி துணை மேலாளர் கிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். துளசிதாஸ் என்பவரின் கரூர் வைசியா வங்கி கணக்கு எண். 1121155000028616 கணக்கின் 2015 ஆம் வருடத்தின் வரவு செலவு அறிக்கை பெற்று தாக்கல் செய்தேன். பின்னர் அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி காவல் ஆய்வாளர் அம்பிகா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது U/s 294(b), 147, 506(1), 406, 420 இதச பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.24 06:41:02 +0530

**1 மற்றும் 2ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ரமேஷ் காவல் ஆய்வாளருக்கு பின்னிட்டு நான் பணியில் சேர்வதற்கு முன் இளங்கோ என்கின்ற காவல் ஆய்வாளர் இந்த வழக்கை விசாரிக்கவில்லை என்றால், விசாரித்ததாக கோப்புகளில் இல்லை. நான் பவானி காவல் நிலையத்தில் எப்போது பணியில் சேர்ந்தேன் என்றால், 2019 ஆம் வருடம், டிசம்பர் மாதம் தான் சேர்ந்தேன். 19.03.2016 தேதிக்கு பின்னிட்டு எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால், அது சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் தற்போது எதுவும் கோப்புகளில் இல்லை,

கடந்த 07.09.2015ம் தேதியன்று கோவை சிட்டி யூனியன் வங்கியிலிருந்து ஜெயக்குமார் வங்கி கணக்கில் இருந்தும் துளசிதாஸ் என்பவரின் கரூர் வைசியா வங்கி கணக்கில் இருந்தும் kianfin Service Ltd வங்கிக்கு பணம் அனுப்பப்பட்டது என்பதுதான் வழக்கு என்றால், சரிதான். எதிரி kianfin Service Ltd க்கு பணம்அனுப்பப்பட்டதாக சொல்லப்படும் தேதியில் சந்திரமோகன் என்பவரின் வங்கி கணக்கில் இருந்து ஜெயக்குமார் மற்றும் துளசிதாஸ் வங்கி கணக்கிற்கு தல ரூ.20,00,000/- என மொத்தம் ரூ.40,00,000/- வந்தது என்றால், சரிதான். நான் சந்திரமோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால், அவர் இந்த வழக்கிற்கு தேவை இல்லை என்பதால் விசாரிக்கவில்லை. துளசிதாஸ் மற்றும் வாதி ஜெயக்குமார் kianfin Service Ltd க்கு அனுப்பப்பட்ட தேதியில்தான் அ

வர்களுக்கு பணம் வந்தது குறித்து எந்த சந்தேகமும் எனக்கு ஏற்படவில்லை என்றால், சரிதான். அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆகியவை 2016 ஆம் வருடமே பெறப்பட்டதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் பணியில் சேர்ந்த பின்பு மீண்டும் விசாரித்துள்ளேன். ஜெயக்குமாரின் சிட்டி யூனியன் வங்கி பரிவர்த்தனை அ.சா.ஆ.6 ஆனது 01.01.2016ம் தேதி தான் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனக்கு முன்பு புலன் விசாரணை அதிகாரிகள் யாரும் வங்கி மேலாளரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால், சரிதான். கோப்புகளில் அது தொடர்பான எந்த ஆவணமும் இல்லை.

kianfin Service Ltd க்கு வாதி ஜெயக்குமார் மற்றும் துளசிதாஸ் இணையதள வழியாகத்தான் பணத்தை அனுப்பினார்கள் என்றால், சரிதான். சிட்டி யூனியன் வங்கியில் கொடுக்கப்பட்ட அறிவிப்பில் We wish to inform your good office that the transactions listed in your aforesaid notice are online Fund transfers. Hence, there is no Physical challan / CCTV Footage available for the same என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். RTGS மூலமாகத்தான் வங்கி பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. kianfin Service Ltd தொடர்பாக பணம் அனுப்பப்பட்டுள்ள விவரம் தெரிந்து நான் மேற்படி kianfin Service Ltd நிறுவனத்தை சாட்சியாகவோ அல்லது எதிரியாகவோ விசாரித்து சேர்க்கவில்லை என்றால், சரியல்ல kianfin Service Ltd தொடர்பாக எந்தவொரு ஆவணமும் கிடைக்கவில்லை.

வாதி ஜெயக்குமார் கொடுத்த புகாரில் டெல்லியில் உள்ள kianfin Service Ltd என்று குறிப்பிடப்பட்ட நிலையில் மேற்படி kianfin Service Ltd ஐ விசாரிக்க நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால், சரியல்ல. பல முயற்சிகள் செய்தும் பரிவர்த்தனை விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. kianfin Service Ltd சம்பந்தமான ஆவணங்கள் கிடைக்க நானோ அல்லது இதற்கு முன்பு விசாரித்த புலன் விசாரணை அதிகாரி ரமேஷ் என்பவரும் என்னென்ன முயற்சிகள் செய்தோம் என்பதை காட்ட எந்த ஒரு ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.24 06:41:08 +0530

இந்த வழக்கின் வாதி ஜெயக்குமார் தனது புகாரில் kianfin Service Ltd நிறுவனத்தின் ICICI வங்கி கிளையில் பணம் அனுப்பப்பட்டதாக புகார் கொடுத்துள்ள நிலையில் மேற்படி ICICI வங்கி கணக்கின் விவரங்கள் எதுவும் பெற்று மற்றும் ICICIவங்கி கிளை மேலாளரை விசாரித்து வாக்குமூலம் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அதை இந்த வழக்கிற்கு தேவை இல்லை என்பதால் நான் விசாரிக்கவில்லை, ஆவணம் எதுவும் பெறவில்லை. இந்த வழக்கின் வாதி ஜெயக்குமாருக்கும் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு தொடர்பு இருப்பது என்பதை காட்ட உரையாடல் விவரங்கள் எதுவும் நான் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். kianfin Service Ltd நிறுவன வங்கி கணக்கிலிருந்து 1 மற்றும் 2 ம் எதிரிகள் பணத்தை எங்கு வைத்து எடுத்தார்கள் என்பதை காட்ட எந்த ஒரு ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

வங்கி பரிவர்த்தனைகள் அனைத்தும் கோயம்புத்தூரில் தான் நடைபெற்றது என்றால், சரிதான். ஆனால் அது தொடர்பான சம்பந்தங்கள் அனைத்தும் ஆப்பக்கூடலில் தான் நடைபெற்றது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் செம்புளிச்சாம்பாளையம், தேவன் தோட்டத்தைச் சேர்ந்த உரிமையாளர் மற்றும் அங்கு பணிபுரியும் பணியாளர்களை விசாரித்து நான் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால், சம்பவம் நடைபெறும்போது அங்கு அவர்கள் யாரும் இல்லை என்பதால், அவர்களுக்கு சம்பவம் பற்றி தெரியாது என்பதால் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவமானது தேவன் தோட்டத்தில் உள்ள ஒரு கட்டிடத்தில் நடைபெற்றதாக தான் காட்டப்பட்டுள்ளது என்றால் வீட்டின் முன்பு உள்ள காலியிடத்தில் சம்பவம் நடைபெற்றது.

மேற்படி சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் மேற்படி வீட்டில் யார் இருந்தார்கள் என்கின்ற விவரத்தை நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால், சரியல்ல. நான் விசாரித்த இரண்டு வங்கி மேலாளர்கள் மற்றும் காவல் உதவி ஆய்வாளர்களை நிலையம் வரச் சொல்லி விசாரித்தேனா அல்லது அவர்கள் பணிபுரியும் இடத்திற்கு நான் சென்று விசாரித்தேனா என்றால், உதவி ஆய்வாளரின் நிலையம் வரச் சொல்லி விசாரித்தேன். வங்கி மேலாளர்களை அவர்கள் பணிபுரியும் வங்கிக்கு சென்று விசாரித்தேன். நான் விசாரித்த மூன்று சாட்சிகளை அழைப்பாணை கொடுத்தது சம்பந்தமாக மேற்படி நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும், சரியல்ல. எனக்கு முன்பு பணியிலிருந்த காவல் ஆய்வாளர் தயாரித்து வைத்திருந்த ஆவணங்களை வைத்து தவறாக குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், இந்த வழக்கின் உண்மையான எதிரி kianfin Service Ltd தான் என்றாலும், ஏதோ ஒரு காரணத்திற்காக kianfin Service Ltd ஐ வழக்கில் சேர்க்காமல் 1 மற்றும் 2 எதிரிகளை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால், சரியல்ல.

இந்த வழக்கின் வாதி ஜெயக்குமாரின் மீது நான் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கை தவறு என்றும் இந்த வழக்கில் மேல்விசாரணை வேண்டும் என இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் என்கின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. 1 மற்றும் 2 எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால், சரியல்ல. நான் வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் 1 மற்றும் 2 எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் தான் ஆவணங்கள் அனைத்தும் காலதாமதமாக இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.24 06:41:14 +0530

**3 ,6 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், 3, 6 மற்றும் 7 எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.24 06:41:26 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani